தமிழர் நேசன்

(தமிழர் கல்விச் சங்கத்துப் பத்திரிகை)

தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு—திருக்குறள்.

தொகுதி VII. { ருதிரோத்காரிஞூ ஆவணிமீ { பகுதி 5.

Bridges.

பாலங்கள்

ஸ்ரீமான் K. சுப்பிரமணிய ஐயர், B. E. எழுதியது.

நமது நேசனின் ஐந்தாவது தொகுதியில் 79-ம் பக்கத்தி லும் 260-ம் பக்கத்திலுமுள்ள இரண்டு சிறுவியாசங்களில் நாம் மரம் செங்கல் இவற்றால் கட்டப்படும் பாலங்களையும் இரும்பு கர்டர்பாலங்களையும் சிறிது கவனித்தோம் இப் போது இருப்புப்பாலங்களில் சில அபூர்வ வகைகளைச் சற்று ஆராய்வோம்.

அபூர்வப்பாலங்களை நான்காய்ப் பகுத்து ஒன்றன்பின் னொன்றாய் கவனிப்போம் அவை ஊஞ்சற்பாலம், ஆர்ச்சுப் பாலம், ஆழங்காற்பாலம், இடம்பெயர்பாலம், எனபபெயரு டையவை. கட்டுமானத்துக்கு இரும்பைவிட பலமுள்ள தொன்றுமில்லை. அதனால் அபூர்வக் கட்டுமானங்களுக் கெல்லாம் (பாலங்களுட்பட) இரும்பே உபயோகிக்கப்படுகி றது. இரும்பென்றால் அதில் எவ்வளவோ குண பேதங்களி

ருக்கின்றன. ஒழுக்கறைக்கும், உருக்குக்கும், சுத்த இரும்புக்கும் பலத்தில் நிரம்பவித்தியாசமுண்டு. கட்டுமானத்துக்கு இரும்பை உபயோகிக்கவேண்டுமென்று மட்டும் சொல்லிவிட்டால் போதாது. எந்தவகை இரும்பு என்றும் குறிக்க வேண்டும். குணமும் பலமும் பார்த்துத்தான் உபயோகிக்க வேண்டும். இரும்பு கர்டர் பாலங்களில் சுத்த இரும்பை உபயோகித்துக்கொண்டிருந்தார்கள். இப்போது உருக்குத்தான் வெகுவாய்க் கையாளப்படுகிறது. ஒழுக்கறையை கர்டர் பாலங்களில் உபயோகிப்பதில்லை.

அபூர்வ வகைகளி லொன்றாகிய ஊஞ்சற்பாலத்தைச் சிலர் சங்கிலிப்பால மென்றும் சொல்லுவார்கள். இரண்டு செங்குத்தான குன்றுகளுக் கிடையில் அதிக ஆழத்தில் வேகமாக ஒரு நதிபோகிறதென்று வைத்துக்கொள்வோம், அதைக்கடப்பதற்கு ஒருபாலம் அமைக்கவேண்டும். ஒரு தனி உத்திரத்தைக்குறுக்கே வைப்பதற்கு முடியாது: நதி அதிக அகலம். நடுவில் திண்டுகள் கட்டி இரண்டு மூன்று கர்டர்களை வைப்பதற்கும் முடியாது: நதி அதிக ஆழம். மேலும்நதியின் வேகத்தைப்பார்த்தால் திண்டுகள் நெடுநாள் நிற்பதும் சந்தேகந்தான். பெரிய இரும்புச்சட்டங்கள் செய்துவைப்பதற்குக் காட்டுப்புறமாயிருத்தலால் வசதிப்போதாது. இப்படிப்பட்ட இடங்களில் ஊஞ்சற்பாலம் போடலாம். நதியின் கரைகள் செங்குத்தாய்க் கிளம்பாமல் கொஞ்சம் சரிவாயிருந்தால் கரையோரமாய் இரண்டு திண்டுகள் கட்டி ஊஞ்சற்பாலத்தின்கண்வாயைக் குறைக்கலாம்.—திண்டுகளிலிருந்து கரைவரையில் இரண்டு சிறு கண்வாய்கள் அமைக்கலாம்.

நதிமிக அகன்றிருந்து ஊஞ்சற்பாலந்தான் கட்டவேண்டுமென்றும் தீர்மானித்திருந்தால் மூன்று நான்கு கண்வாய்கள் ஏற்படுத்தலாம். அப்போது நதிப்படுகையில் திண்டுகட்ட

வேண்டியதுதான். அநேகம் கண்வாய்களுள்ள ஊஞ்சற்பாலம் ஒரே கண்வாயுள்ளதை விடக்குறைந்த செலவில் முடியுமென்று கணக்கிட்டிருக்கிறார்கள்.

ஊஞ்சற்பால மென்றால் என்ன? நாம் வீட்டில் வேஷ்டி துணிகளை உலர்த்துவதற்குச் சுவரில் இரண்டு ஆணிகளடித்து அவற்றில் ஒருகயிற்றின் நுனிகளைக்கட்டிப் பின் அக்கயிற்றுக் கொடியில்வேஷ்டிகளைத்தொங்கவிடுவதில்லையா? (படம்-1) கயிற்றின்நுனிகளை ஆணிகளில் கட்டாமல் ஆணிகளுக்கு மேலோடு கொண்டுவந்து நுனிகளில்இரண்டு கற்களைக் கட்டி விட்டாலும் கொடியில் துணிகளை யுலர்த்தலா மல்லவா? (படம்-2)ஊஞ்சற்பாலமும் ஒரு கயிற்றுக்கொடி தான். ஆணிகளுக்குப்பதிலாக கோபுரம் போல் இரண்டு தூண்கள் கட்டுகிறோம். அவற்றினிடையில் இரும்பு வடத்தையாவது சங்கிலியை யாவது விரிக்கிறோம். கயிற்றின் நுனிகளில் கற்களைக் கட்டி விடுவதற்குப் பதிலாக ஊஞ்சற்பாலத்தின் கயிற்றின் நுனிகளை பூமியுடனிழுத்துக் கட்டிவிடுகிறோம். கயிற்றுக் கொடியில் வேஷ்டி துணிகளைத் தொங்கவிடுவதுபோல், ஊஞ்சற்பாலக் கயிற்றிலிருந்து கம்பிகள் கொக்கிகள் முதலியவற்றைக் கொண்டு மனிதரும் வண்டிகளும் போகும்பாதையைத் தொங்கவிடுகிறோம், (படம்-3) கயிற்றுக் கொடிக்கும் ஊஞ்சற்பாலத்துக்கு முள்ள சம்பந்தத்தைப் படங்களில் பார்க்கவும். பாதை ஊஞ்சல்போல் தொங்குவதால் அதற்குப் பெயர் ஊஞ்சற் பாலம். இரும்பு வடக் கயிற்றுக்கு பதில் இரும்புச் சங்கிலி உபயோகிக்கப்பட்டிருந்தால் அதற்குப் பெயர் சங்கிலிப் பாலமென்று சொல்லலாம்.

ஆர்ச்சுப் பாலத்துக்கும் இதற்கும் உறவுண்டு. விசைகளிவை ஒன்றுக் கொன்று எதிரிடை. ஊஞ்சற் பாலத்தில் பாதையைத் தாங்கும் கயிறு ("Tug of war") "டக்-அப்-

வார்" என்ற விளையாட்டில் அகப்பட்ட கயிறுபோல் இழுக்கப் படுகிறது. கொடி அறுந்து விழுமே தவிர நசுங்கி விழாது. அதில் இழுவிசை மட்டும் தான் வரும். ஆர்ச்சு எவ்விடத்திலும் இறுக்கி நசுக்கப் படுகிறது. பாதி யறுத்த மரத்தி லகப்பட்ட ஆப்பு என்ன விசையி லகப்பட்டுக் கொண்டிருக்கிறதோ அதுதான் - இறுக்கு விசை தான் - ஆர்ச்சின் மேல் வரும் ஆர்ச்சில் உற்பத்தி ஸ்தானங்க ளிருப்பது போல் ஊஞ்சற் பாலத்தில் திண்டுக ளிருக்கின்றன. ஆர்ச்சின் முட்டுச் சுவர்கள் அதன் கோணலான-உதைத்துத் தள்ளும் - விசையைத் தாங்கி பூமியிற் சேர்ப்பதுபோல் ஊஞ்சற் பாலக் கயிற்றை பூமியிற் சேர்த்துக் கட்டும் திண்டுக்கப்பாலுள்ள நங்கூரக் கயிறுகளும் கோணலான இழு விசையைத் தாங்குகின்றன. ஆர்ச்சின் உச்சியில் இறுக்கு விசை நேர் மட்டமா யிருக்கும் ஊஞ்சற் பாலக் கயிற்றிலும் தொய்வு மிகுந்த மத்திய பாகத்தில் இழுவிசை நேர் மட்டமாய்த் தானிருக்கும்.

ஊஞ்சற் பாலத்தின் கயிறு என்ன வடிவமாய்த் தொங்கும்? தன் கனம் மட்டுமே தாங்கும் ஒரே கயிறு 'காடிநரி' (Catenary) என்ற உருவமாயும் (படம்-4) கனமில்லாத கயிறு எங்கும் சமகனமுள்ள நேர் மட்டமான பாறையைத் தன் நீள முழுதும் தாங்கினல் 'பராபோலா' (Parabola) என்ற வடிவமாயும்-(படம்-5) தொங்குமென்றும் கணிதநூல் சொல்லுகிறது. ஆகாயத்தில் ஒரு கல்லை எறிந்தால் அது எந்த வழியாய் உயரப்போய்த் திரும்பி விழுகிறதோ அந்த வழியின் வடிவத்துக்குப் பெயர் 'பராபொலா, கண்டியின் மூக்கிலிருந்து ஜலத்தைச் சரித்தால் அது பாதிப் பரா பொலா ரூபமாய்த் தான் கீழே விழும். காடிநரியும் பராபோலாவும் கண் பார்வைக்கு அவ்வளவு வித்தியாசமாய்த் தெரியாது.



ஊஞ்சற் பாலத்தில் கயிற்றை கனமில்லாத கயிறு என்றெடுத்துக் கொள்ள முடியாது. ஆனால் பாதையின் கனத்தோடு ஒத்துப் பார்த்தால் கயிற்றின் கனம் குறைவாயிருக்கும். அத

னால் அக்கயிறு காடிகாரிக்கும் பராபொலாவுக்கும் பொது வாய்த் தொங்கும். கயிற்றின் கனம் பாதையை உத்தேசித்து மிகக் குறைந்துவிட்டால் பராபொலாவாய்த் தொங்கும்: எறியப்பட்ட கல்லின் வழியைக் கவிழ்த்ததுபோ லிருக்கும்.

ஊஞ்சற் பாலங்கள் கட்டுவதில் சில அனுகூலங்களும் சில பிரதிகூலங்களும் இருக்கின்றன. பாலத்தில் இழுவிசையைத் தவிர வேறொன்றும் கிடையாது. பாலத்தைத் தாங்குவது கயிறு. கயிற்றுக்கு விறைப்புக் கிடையாததனால் எந்தத் திசையில் இழுக்கப் படுகிறதோ அந்தப் போக்கில் திரும்பி நிற்கும். அதனால் பொருளின் முழு பலமும் எப்போதும் உபயோகத்தி லிருக்கிறது. இவ்விதம் அமைப்பது சிற்ப சாஸ்திரத்தின் முக்கியக் கருத்துகளிலொன்று. பொருள் வீணாய் வந்தடையாது. இவ்விதம் கனம் குறைவும் பலம் அதிகமுமாய்க் கட்டுவதால் அகன்ற கண்வாய்களுக்குப் பணச் செலவு குறையும். மேலும் ஆழமான பள்ளத் தாக்குகளில் சாரம் முதலியவையின்றி இப்பாலத்தைக் கட்டி முடிக்கலாம். ஆனால் கனக் குறைவினாலும் கயிற்றின் விறைப்பின்மையாலும் இதன்மேல் கனத்த வண்டியாவது ரயிலாவது வேகமாய் உருண்டுபோனால் இது ஊசலாடும். கயிற்றுக் கொடியில் ஒரு ஓரத்திலிருந்து இன்னொரு ஓரத்துக்கு வேகமாய் ஒரு துணி மூட்டையைத் தள்ளினால் கொடி குதிக்குமல்லவா? அதைப் போலவேதான் இப்பாலமும் ஊசலாட்டத்தை யுடையது. இதனால் சிறு கண்வாய்களுக்கு ரயில் பாலம் ஊஞ்சற் பாலமா யிருப்பது சரியன்று. கண்வாய் பெரிதா யிருந்தால் ஊசலாட்டம் தெரியாது. நீண்ட கொடியில் முன் சொன்ன துள்ளுதல் குறைவா யிருப்பதுபோல் அகன்ற கண்வாயில் ஊஞ்சற் பாலத்தின் துள்ளுதலும் ஆட்டமும் குறைந்துபோகும்.

இவ்விதப்பாலங்களில் கயிற்றுக்குப் பதிலாகச் சங்கிலி களை உபயோகிப்பதுண்டு என்று முன்னே சொன்னோம். தற்காலத்தில் சங்கிலிகளை யுபயோகிக்கும் வழக்கம் குறைந்து விட்டது. சங்கிலிகள் துவிசக்கரத்தில் (சைகிளில்) இருப்ப தைப்போல் பட்டைத்தகடுகளை ஆணிகளால் சேர்த்திருக்கும். இருப்புக்கயிறுகள் மெல்லிய உருக்குக்கம்பிகளைச் சேர்த்துத் தேர்வடம்போல் முறுக்கியாவது அடுக்காய்த் துடைப்பக்கட் டைபோல் கட்டியாவது இருக்கும். சங்கிலி கயிற்றைவிட பலக்குறைவுதான்; என்றாலும் துருஏறி பலங்குன்றாமல் சங் கிலியில் இடுக்குகளிலெல்லாம் சாயம் பூசலாம். கயிற்றால் அவ்விதம் பூசமுடியாது. மேலும் கட்டினபாலத்தில் பலத் தை அதிகப்படுத்த வேண்டுமானால் சங்கிலியாயிருந்தால் கூடச்சில தகடுகள் சேர்த்துப் பலத்தை அதிகரித்துக் கொள்ளலாம். கயிறாயிருந்தால் கூடச்சில கம்பிகள் சேர் த்து முறுக்கமுடியாது. கயிறுகளிலும் அடுக்காய்க் கட் டுவதைவிட முறுக்குவது பலமதிகம்; துருவும் விரைவில் ஏறாது. அப்படியிருந்தும் அடுக்காய்க் கட்டுவதுதான் சிலாக் கியமென்று சில எஞ்ஜினியர்கள் கருதுகிறார்கள். காத்தரயில் வண்டித் தொடர்களையும் மிக அகன்றகணவாயில் பாதைகளை யும் தாங்க ஊஞ்சற்பாலம் கட்டும்போது ஊசலாட்டத்தைக் குறைக்கச் சில உபாயங்கள் உண்டு. கோபுரங்களுக்கிடை யில் 1057 அடி யகலக்கண் வாயுள்ள (Covington and Cincinnatti) கவிங்க்டன் அண்ட் ஸின்ஸின்னட்டி, ஊஞ்சற் பாலத்திலும் நயாகரா (Niagara) அருவிப்பாலத்திலும் பாதையை ஆடவொட்டாமல் கோணலான வடங்களால் திண் டுகளோடு கட்டினார்கள். இவ் வுதவிக்கயிறுகள் திண்டுகளின் உச்சியிலிருந்து விசிறிபோல் கிளம்பித் திண்டிலிருந்து வெகு தூரம்வரையில் பலவேறிடங்களில் பாதையைப் பற்றித் தாங்

குகின்றன. முக்கியமான கயிறு நடுவிலுள்ள பாதையைத்தாங்கவே உபயோகமாகிறது. ஆட்டம் இக்கயிறுகளால் எப்படிக் குறையும் என்பது சிறிது யோசித்தால் விளங்கும். நயாகரா அருவிப்பாலத்துக்கு 16 உதவிக் கயிறுகள் கட்டப்பட்டன. நடுவில் ஒரு பெரியகண்வாயும் ஓரங்களில் இரண்டு பக்கக்கண்வாய்களும் அமைத்து ஒரே முக்கியக் கயிற்றிலிருந்தும் உதவிக்கயிறுகளிலிருந்தும் மூன்றுபாதைகளையும் தொங்கவிட்டால், ஒவ்வொரு கண்வாயிலுள்ள பாதையின் கனமும் மற்றவைகளின் ஆட்டத்தைக் குறைக்க உதவும். கவிங்டன் பாலத்தில் இப்படியமைக்கப்பட்டது. நியூயார்க்கிலுள்ள புகழ்பெற்ற ப்ரூக்லின் (Brooklyu) பாலத்திலும் இவ்வுபாயமே வழங்குவதைக் காண்க. (படம் 6) உதவிக்கயிறுகளிருந்த போதிலும் அதில் பாதையைத்தாங்கும் குத்தானகம்பிகள் ஒரு திண்டு முதல் இன்னொரு திண்டுவரை பாதையின் நீளமுழுதும் இருக்கின்றன. அதாவது, பாதையின் நுனிகள், உதவிக்கயிறுகளாலும் குத்துக்கம்பிகள் மூலமாய் முக்கியக்கயிற்றாலும் தாங்கப்படுகின்றன. சமீபத்தில் ப்ரான்ஸ் தேசத்தில் கட்டப்பட்ட சில ஊஞ்சற்பாலங்களில் பாதையோரங்களைத் தாங்கக் குத்துக்கம்பிகளில்லை,- கோணலான உதவிக்கயிறுகள் மட்டுந்தானிருக்கின்றன, இதை ப்ரான்ஸில 'அல்லியா' நதியின் (River Allier) மேலுள்ள 'ஸெண்ட் இல்பிஸ் (St. Ilpize) பாலத்தில் காண்க. (படம் 7) கிளிப்டன் (Clifton) ஊஞ்சற்பாலமென்பது இங்கிலாந்தில் ஆவான் நதியின் (River Avon) மேல் செங்குத்தான குன்றுகளுக்கிடையில் கட்டப்பட்டது. (படம் 8) கோபுரங்களுக்கிடையில் 702 அடியகலமுள்ள கண்வாய். பாலம் நதியின் வெள்ளஜல மட்டத்துக்கு 248 அடிக்கு மேலிருக்கிறது. பாதை 31 அடி அகலமுள்ளது. மூன்றுசங்கிலிகளால் தாங்கப்பட்டது. சங்கிலியின் தொய்வு 70 அடி. ஒவ்வொரு சங்



கிளியும் ஒன்றுக்கு 20 அடிக்கு மேலுள்ள இன்னொருசங்கிலி யுடன் சேர்க்கப்பட்டது. ஒவ்வொருசங்கிலியிலும் குறுக்கில் 481 சதுர அங்குலம் இரும்பிருக்கிறது. பாலமத்தியில் 2094 டன் இழுவிசை வருமென்று மதிப்பிட்டிருக்கிறார்கள். சங்

கிலி அவ்வளவு கனத்தைத் தாங்கப் போதிய பலமுள்ளதாயிருக்கவேண்டும். இந்தப் பாலத்தில் உதவிக்கயிறுகளொன்றுமில்லை. பாதைக்குக் கைபிடிபோல் பெரிய கர்டர் சட்டங்கள் வைத்திருக்கிறார்கள். இந்தச் சட்டங்களினால் ஆட்டம் குறைகிறது. பாதையைத் தாங்கும் குத்துக்கம்பிகள் இரண்டு சதுர அங்குலக் குறுக்களவுள்ளதாயும், ஒன்றுக்கொன்று 8 அடி தூரத்திலும், பாதைமுழுதும் இருக்கின்றன. சங்கிலிகள் கோபுரங்களின் உச்சியில் வார்த்த சேணங்களின் மேல் உட்காருகின்றன. பனியிலும் வெயிலிலும் பாரங்களினாலும் சங்கிலி நிலைமாறி நீண்டு குறுகிவரும்போது சேணங்கள் அதற்குத் தக்கபடி நிற்பதற்காக உருக்கு உருளைகளின்மேல் தாங்கப்பட்டிருக்கின்றன. இப்பாலத்தின் நங்கூரச் சங்கிலிகள் பூமிக்குள் நல்ல பாறைமேல் உதைத்துக் கொண்டிருக்கும். ஆர்ச்சில் புதைந்த தகடுகளில் பிணைக்கப்பட்டிருக்கின்றன. இதைக் கட்டுவதற்குப் பள்ளத்தாக்கில் எட்டு இரும்புக்கயிறுகள் கட்டி அவற்றிலிருந்து தொட்டில் போல் ஒருசாரம் தொங்கவிட்டு அதிலிருந்து சங்கிலிகளைச் சேர்த்தார்கள். பாலம் முடிந்தபின் 500 டன் கனம் கல்லைப் பரப்பி பலத்தைச் சோதித்தார்கள். மத்தியில் 7 அங்குலம் அழுங்கிற்று. பாரத்தை எடுத்தவுடன் பாலம் மறுபடியும் நிமிர்ந்து கொண்டது. இது பலத்த காற்றடிக்கு இடத்திலிருப்பதால் பாதையின் ஆட்டம் 1 அடிவரையிலுமிருக்கலாம். அதற்கு மேற்படாது என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

(தொடரும்)

தமிழ்ச் செல்வம்.

Tamil Classics.

கோவலன்—கண்ணகி.

“இடைக்குல மடந்தையர் இயல்பில் குன்றா
மடைக்கலம் தன்னோடு மாண்புடை மரபில்
கோளிப் பாகல் கொழுங்கனித் திரள் காய்
வாள்வரிக் கொடுங்காய் மாதுளம் பசுங்காய்
மாவின் கனியொடு வாழைத்தீங்கனி
சாலி அரிசி தம்பால் பயனோடு,
கோல்வளை மாதே கொள்கெனக் கொடுப்ப ;
மெல்விரல் சிவப்பப் பல்வேறு பசுங்காய்
கொடுவாய்க் குயத்து விடுவாய் செய்யத்
திருமுகம் வியர்த்தது, செங்கண் சேந்தன,
கரிப்புற வட்டில் கண்டனள் பெயர;
வைஎரி ஊட்டிய ஐயை தன்னோடு
கைஅறி மடைமையில் காதலற்கு ஆக்கி!
தாலப்புல்லின் வால் வெண் தோட்டுக்
கைவல் மகடூஉக் கவின்பெறப் புனைந்த
செல்வினைத் தவிசில் செல்வன் இருந்தபின்,
கடிமலர் அங்கையில் காதலன் அடிநீர்
சுடுமண் மண்டையில் தொழுதனள் மாற்றி,
மண்ணக மடந்தையை மயக்கு ஒழிப்பனள்போல்
தண்ணீர் தெளித்து, தன்கையால் தடவி,
குமரி வாழையின் குருத்து அகம் விரித்து, ஈங்கு,

'அமுதம் உண்க அடிகள் ஈங்கு' என ;

* * *

உண்டு இனிது இருந்த உயர் பேராளற்கு
அம்மென் திரையலோடு அடைக்காய் ஈத்த
மையீர் ஓதியை வருகெனப் பொருந்தி,
"கல்அதர் அத்தம் கடக்க யாவதும்
வல்லுந கொல்லோ மடந்தை மெல்அடி' என,
வெம்முனை அருஞ்சுரம் போந்ததற்கு இரங்கி !
எம்முது குரவர் என் உற்றனர் கொல் ?
மாயம் கொல்லோ! வல்வினை கொல்லோ ?
யான் உளம் கலங்கி யாவதும் அறியேன் !
வறுமொழி யாளரொடு, வம்பப்பரத்தரொடு,
குறுமொழிக்கோட்டி நெடுநகை புக்குப்
பொச்சாப்புண்டு, பொருள் உரையாளர்
நச்சுக்கொன் றேற்கு நல்நெறி உண்டோ ?
இருமுது குரவர் ஏவலும் பிழைத்தேன் !
சிறுமுதுக்குறைவிக்குச் சிறுமையும் செய்தேன் !
வழுஎனும் பாரேன் ! மாநகர் மருங்கு ஈண்டு
எழுகென எழுந்தாய் என்செய்தனை ! "என !
"அறவோர்க்கு அளித்தலும், அந்தணர் ஓம்பலும் !
துறவோர்க்கு எதிர்தலும், தொல்லோர் சிறப்பின்
விருந்து எதிர்கோடலும் இழந்த என்னை, நும்
பெருமகள் தன்னொடும் பெரும் பெயர்த்தலைத்தாள்
மன்பெரும் சிறப்பின் மாநிதிக் கிழவன்,
முந்தைநில்லா முனிவு இகந்தனன்,
அன்புஉளம்சிறந்து, ஆங்கு அருள்மொழி அளைஇ,
என்பாராட்ட, யான் அகத்து ஒளித்த
நோயும் துன்பமும் நொடிவது போலும், என்
வாயின் முறுவற்கு அவர் உள்ளகம் வருந்த,

போற்றா ஒழுக்கம் புரிந்தீர் யாவதும்
மாற்றா உள்ள வாழ்க்கையேன் ஆதலின்
ஏற்று எழுந்தனன்யான்" என்று அவள்கூற !
"குடிமுதல் சுற்றமும், குற்றிளை யோரும்
அடியோர் பாங்கும் ஆயமும் நீங்கி,
நாணமும் மடனும் நல்லோர் ஏத்தும்,
பேணிய கற்பும் பெருந்துணை யாக,
என்னொடு போந்து, ஈங்கு என்துயர் களைந்த
பொன்னே ! கொடியே ! புனைபூங் கோதாய் !
நாணின் பாவாய் ! நீள்நில விளக்கே !
கற்பின் கொழுந்தே ! பொற்பின் செல்வி !
சீறடிச் சிலம்பின் ஒன்று கொண்டுயான்போய்
மாறிவருவன் ! மயங்காது ஒழிக" என !
கருங்கயல் நெடுங்கண் காதலி தன்னை
ஒருங்குடன் தழீஇ, உழையோர் இல்லா
ஒருதனி கண்டு, தன் உள்ளகம் வெதும்பி,
வருபனி கரந்த கண்ணன் ஆகி,
பல் ஆன் கோவலர் இல்லம் நீங்கி,
வல்லாநடையின் மறுகில் செல்வோன்."

சிலப்பதிகாரம்.

[பூம்புகாரை நீங்கி மதுரையை அடைந்த கோவலனும் கண்ணகியும், அவன் சிலம்புவிற்க மதுரை நகர்க்குள் செல்லு முன், ஆயர்சேரியில் தங்கி உண்டதையும், அவர்க்குள் நடந்த சம்பாஷணையையும், இளங்கோவடிகள் வருணிக்கும் பாக்கள் இவை. கவுந்தியடிகள்முதலிய பிறருடன் பிரயாணப்பட்டு வந்த அவர்களுக்கு, தனித்துப்பேசும் சமயம் அதுகாறும் வாய்க்காமல், அப்பொழுதே சிறிது கிடைத்தது].

இனிப் பாக்களின் பொருள்வருமாறு—[விருந்தினராய் உற்ற அவ்வைசியகுலதம்பதிகளுக்கு ஐயை முதலிய] இடைச்சியர், சமையல் செய்தற்குப் புதிய மட்கலங்களும்; பூவாது காய்க்கும் பாகலின் முதிர்ந்தகாய், விளைந்த வரிகளையுடைய வெள்ளரிக்காய், கொம்மட்டி மாதுளங்காய், இனியமாம்பழம், வாழைப்பழம், செந்நெல்அரிசி, பால், நெய், தயிர் முதலிய பதார்த்தங்களைக் கொணர்ந்து, கண்ணகிக்கு உதவினர். அவள், அக்கறிகாய்களை, தன்மெல்லிய விரல்கள் சிவப்ப அழகிய முகம் வியர்க்க. விளைந்த அரிவாளால் வேண்டியபடி நறுக்கிக்கொண்டாள்; பிறகு, கரியை இடத்தையுடைய அடுப்பில் தீமூட்ட அவள் கண்கள் சிவந்தன; அதைக்கண்ட ஐயை வைக்கோலைக்கொண்டு தீமூட்டி உதவ, கண்ணகி, தான் அறிந்தமட்டும், தன் காதலனுக்குச் சமையல் செய்துவைத்தாள்; பின்பு, வெள்ளிய பனங்குருத்து ஓலையினால் கைவல்லி பெண்பால் முடைந்த தவிசை எடுத்துப்போட, கோவலன் வந்து அதன்மேல் (சாப்பிட) உட்கார்ந்தான். கண்ணகி; புதுமட்கலத்தில் நீர் கொணர்ந்து அவன் கால்களைக் கழுவிய நீரைத்தான் தெளித்துக்கொண்டு தொழுதானபின், அவன் முன்பு தரையை சுத்தம் செய்து, ஈனுவாழையின் குருத்திலையை எடுத்துப்போட்டு, தான்சமைத்த அடிசில் பதார்த்தங்களைப் பரிமாறி; "அடிகள்! உண்க" என்று உபசரிக்க, அவன் உண்டானபின்; அவனுக்கு அருகே நின்று தாம்பூலம் மடித்துக் கொடுக்கலானாள். கோவலன்; அவளை அன்புடன் "வா" என்று அருகே அணைத்துக்கொண்டு சொன்னதாவது:— "கற்கள் பரந்து; பாதையின்றி, வேடர்வழிப்பறிசெய்யும் காட்டிலே, மிருதுவான பாதங்களையுடைய நமது மருமகள் எவ்வாறு நடந்து சென்றனளோ என்று வருந்தி; என்தாய் தந்தையர் எப்பாடுபட்டாரோ? நாம் இவ்வாறு (ஊர்விட்டுஊர்) வந்திருப்பதுதான் கனவேயோ! அல்லது மெய்யாயின், இக்கதியை

யுற என்ன பாவம் செய்தோமோ! என்மனம் கலங்குகின்றதே ஒழிய ஒன்றுமே தெளிவாய் அறிகிலேன், வீணரரோடும் விடர்களோடும் கூடிப் பிறரைப்புறங்கூறும் மக்களோடு பழகி வெடிசிரிப்புக்குட்பட்டு,மெய்மறந்து; நல்லோர் விரும்பும் ஒழுக்கங்களைவிட்டுக் கெட்டலைந்த எனக்கு, இனித்தீக்கதியன்றி நற்கதி யுண்டாமோ? என் அருமைத் தாய்தந்தையர்க்கும் பொல்லாதவனாகி, உனக்கும் சிறுமைசெய்து, என்நடத்தையின் வழுவைச் சிறிதும் பாராமல், ஒழுகிய நான், நாம் ஊரைவிட்டு வேறூர் போவோம்' என்று சொன்ன மாத்திரத்திலே (என் தூர்த்தத்தனத்தை முற்றிலும் மறந்து) அது தகாதென்று மறுக்காமல், என் சொற்கிணங்கி உடனே என்னுடன் புறப்பட்டு விட்டாயே! அந்தோ! என்னகாரியம் செய்து விட்டாய்!

கண்ணகி:—அறவோர்க்கு அளித்தல், அந்தணரை ஓம்புதல், துறவிகளை எதிர்கோடல் முதலிய இல்வாழ்க்கைக்குரிய பெருமைகளை யெல்லாம் (உம் ஒழுக்கத்தால்) இழந்திருந்த என்பொறுமையைப் பெருமைதங்கிய உமது தாய் தந்தையர் கண்டு அன்போடு பாராட்டி, என்பொய் முறுவலானது என் மனத்து யான் மறைத்துவைத்த கவலையையும், துன்பத்தையும் வாய்திறந்து வெளிப்படுத்துவது போலே இருந்தது என்று எனக்காக மனம் வருந்தாநின்றனர். நீர், அவர் போற்றாத தீயொழுக்கத்தினராகி நடப்பினும், நான் உம்முடைய சொற்படி நடக்கும் உள்ளத்தினள் ஆதலின் 'நீர்' புறப்படு என்ற அளவிலே அதற்கு உடன்பட்டு எழுந்தேன்.

கோவலன்:—சுற்றத்தார், குற்றேவல் செய்வோர், அடியார், பாங்கியர் ஆகிய நால்வகைப் போக்கியங்களையும் நீங்கி; நாணமுதலிய நாற்குணங்களையே துணையாக்கொண்டு, அறிவற்ற தூர்த்தனுன என்னுடன் வந்து, என்தனிமையையும்

துன்பத்தையும் தீர்த்த பொன்னே! கொடிபோல்பவளே! அழகிய பூங்கோதாய்! நாணின் பதுமைபோன்றவளே! பூமிக்கு ஓர்தீபம் போன்றவளே! கற்பின் கொழுந்தே! பொற்பின் செல்வீ! உன் அழகிய அடிச்சிலம்புகளில் ஒன்றைக் கொண்டு போய் நான் விற்றுப் பொருள்கொண்டு வரும்வரை நீ தனிமையால் வருந்தாது பொறுத்திரு.

இவ்வாறு கூறிய கோவலன், தன் தலைவியை மார்புறத் தழுவி விடைபெற்று, சிலம்புடன் புறப்பட்டான். அப்பொழுது அவனுக்குத் துணை எவரும் இல்லாமையை நினைந்து கண்ணீர் ததும்ப, அவன் அதை மறைத்துக்கொண்டு, பல பசுக்களும் எருமைகளுமுள்ள அவ் இடைச்சேரியை விட்டு மாட்டா நடையோடு வெளிப் போந்தான்"

அ. மா.

தமிழ் மொழிகள்

Tamil Terms

மனுஷ வங்காதி பாதம்

Human Anatomy

ஸ்ரீ தனெல் வி. சப்மன் என்னும் வைத்தியரால் மொழி பெயர்க்கப்பட்டு, அமெரிக்கா லங்கை மிஷனைச்சேர்ந்த ஸ்ரீசமுவல் பி. கிறீன் என்னும் வைத்தியரால் திருத்தப்பட்டு 1872ம் வருஷத்தில் வெளியிடப்பட்ட மனுஷவங்காதிபாதம் என்னும் அரிய நூலின் கடைசியில் காணப்படும் அட்டவணையினின்றும் இம்மொழிகள் எடுக்கப்பட்டனவாகும்.

(72-ம் பக்கம் தொடர்ச்சி)

Fossa, pterygoid of sphenoid - பாதவ
,, scaphoid - காவாய்
,, spheno-maxillary - சதுக தாடை
,, of skull - மண்டை
,, subscapular - வாகுமுன்
,, sub-lingual - நாக்கீழ்
,, sub-maxillary - தாடைக்கீழ்
,, supraspinous - புருவமேல்
,, temporal - கேசார்
,, trochanteric - கணுக்குழி
,, zygomatic - யுக
Fourchette - அல்குற்கவை, வடிசம்
Fovea centralis retinae - நடுக்குழி
,, hemispherica - திகிரிக்குழி
Fossa semielliptica - அண்டக்குழி
Fraenulum - குசை
,, pudendi - அல்குற்
,, praeputii - முன்றோல்
Fundus - அடி
Funiculus - ரச்சுகம், கற்றை
Furrow - சால், சீவை, தவாளிப்பு
Furrowed band of cerebellum - திரைத்தபிணி
Fusiform - தர்க்குவ

Gall bladder - பித்தப்பை, மாயுகம்
Ganglion - கிரந்தி
,, absorbent - சோஷன
,, Arnold's - ஆணலர்
,, of Andersch - அண்டக்சர்

Ganglion cardiac - இரிக
,, carotid - கிரீவ
,, cervical - கழுத்து
,, ciliary - நயன
,, diaphragmatic - விதான
,, Gasserian - கசர்
,, inpar - ஒற்றை
,, inter-carotid - கிரீவ கவை
,, jugular - கந்தர
,, lenticular - நயன
,, lingual - நா
,, lumbar - இடுப்பு
,, Meckel's - மெகெல்
,, opthalmic - நயன
,, otic - சோத்திர
,, petrous - கிராவ
,, pneumo-gastric - உரோதர
,, renal - பிருக்க
,, of root of vagus - உதரோதர வேர்
,, sacral - பீடிகை
,, semilunar - குடில
,, solar - குகிப்பின்
,, spheno-palatine - சதுகதாலு
,, submaxillary - தாடைக் கீழ்
,, sympathetic - சகவேத
,, thyroid - வீதன
,, of trunk of vagus - உரோதர காண்ட
,, of Wrisberg - ரிஸ்பேகர்
Generative organs - சனன உறுப்பு
Genu of corpus callosum - மகா யுகவங்கம்
Germinal - சபுடன
,, centre - மத்திய
,, disc - வட்டம்
,, eminence - புடை
,, spot - கண்
,, vesicle - விலம்
Ginglimus - கிங்கிலு சந்தி
Gladiolus - அசி
Gland-கிளன்று,கோளம், கிரந்தி
,, accessory of parotid - சோத்திரானுசங்க
,, aggregate or agminate - கூட்டு
,, axillary - அக்கின்
,, Bartholine - பர்த்துலின்
,, of biliary ducts - பித்ததாரை
,, bronchial - அசுக
,, Brunner's - புருன்னர்
,, buccal - சதுப்பு
,, ceruminous - குறும்பி
,, cervical - கழுத்து
,, Cowper's - கவுபர்
,, duodenal - பசுத
,, gastric- குக்குக்குதுவம்
,, iliac - பாலிக
,, inguinal - வஞ்சண
,, intercostal - பழுவிடை
,, kidney - பிருக்க
,, labial - உதட்டு
,, lachrymal - கண்ணீர்
,, of Littre - லித்தர்
,, lumbar - இடுப்பு
,, mammary - ஸ்தன
,, Meibomian- மைபோமிக் குதுவம்
,, molar - கதுப்பு
,, œsophageal - இரைக் குழற்
,, of Pacchioni - பகியனி
,, வசுகங்கள்
,, palatal - அண்ண
,, parotid - செவி முன், சோத்திரானு
,, peptic - பாசக குதுவம்
,, Peyer's - பயர்
,, pineal - பாலுகம்
,, pituitary - சுவல்
,, popliteal - மக்கிர
,, prostate - புரஸ்த

Gland sacral - பீடிகை
,, salivary - உமிழ் நீர்
,, sebaceous - கிணை
,, solitary - தனி
,, sublingual - நாக்கீழ்,
,, submaxillary - தாடைக் கீழ்
,, sudoriferous - வெயர் வை
,, suprarenal - பிருக்கோ பரி
,, thoracic - நெஞ்சு
,, thymus - புரோ ரகோளம்
,, thyroid - வீதன
,, tracheal - சுவாசக் குழல், தமரக
,, of Tyson - தைசன்
,, uterine - சராயு
Glandule - கோளகம், கிளன் றுல்
Glans * penis - சிசின மணி, மொட்டு
,, clitoridis - சுமரி
Gliding movement - வழுக்கு தல்
Glisson's capsule - கிலிச னுறை
Globus major of epididymis - பேருண்டை
Globus major minor - சிற் றுண்டை
Glottis - குரலி, கிரீ ர த ம், கிளட்டி
Gomphosis - கம்வசிச் சந்தி
Graafian vesicle - பரிச்சினை பரிதாதம்
,, ovicapsule of-சினையுறை
Granule - லவம், கிறனுல்
Groin - வஞ்சணம், கிரூன்
Groove - சால், சீதை, தவா ளிப்பு, குல்லிவை
,, bicipital - இருமூலி
,, cavernous - குகா
,, dental - பல்
Groove infra-orbital-குவளைக் கீழ்
,, lachrymal - நாசி
,, mylo-hyoid - தனுகுஞ்சி
,, nasal - நாசி
,, occipital - பிடர் காடி
,, optic - பார்வை, தரிச
Group of muscles - பைசியம்
,, of arteries - நவுடியம்
Gubernaculum testis - பீசா ரித்திரம்
Gums - முரசு, ஈறு
Gyrus opertus - பக்கச் சுருள்

Hair - மயிர், உரோமம், கே சம்
Hair follicles. of - குதுவம்
Ham - மசதிரம், சானுகம்
Hand - கை, கரம், அஸ்தம், பாணி
Hard palate - வன்னண்ணம்
Harmonia - தொடர்கரேகை, தொடர்சந்தி
Head - தலை, சிரம்
,, of bone - குமிழ்
Heart - இதயம், இரிகம், இரத் தாசயம், உதிராசயம்
,, muscle of - பேசி
,, size - பருமை
Helicotrema of cochlea - மே லனம்
Helix - செவிச் சுருள்
Hiatus Fallopii - வலோப் பியர்காதம்
Hilum - கண், குடா
Hippocampus major - பெ ருஞ்சேது
,, minor - சிறுச்சேது
Horizontal - திகந்த
Horny band - கொம்பி
Humors of the eye - கண் ணின் சுவச்சங்கள்
Hymen - அரணி, ஐமென்
Hypochondrium - பிசண்டம்

Hypogastrium - கீழ்வயிறு, அதோதரம்

Ileo-caecal valve - இலியவந்தைகைக் கபாடம்
Ileum, the bowel - இலியம்
,, the bone - பாவிகம், ஒக்கலை
Incision - கீறு, வெட்டு, கிசேதம்
Incisura intertragica - சாகக் கவை
Infundibulum of brain - பிரஞளி
Inosculation or anastomosis - அனுமுகம்
Internal - உள், அகம்
Interpeduncular space of brain - பாசவிடைவெளி
Intestine - குடல், ஆந்திரம்
,, large - பெருங்குடல்
,, small - சிறுகுடல்
Investment - போர்வை
Intumescentia gangliformis - கிரந்திவம்
Iris - வருணி, இரிசு
Island of Reil - லைல் தீவு
Isthumus of fauces - தொண்டை வாயில்
,, of thyroid gland - கழுந்து
Iter ad infundibulum - பிரஞளிக் கயனம்
,, atertio ad quartumventriculum-மூன்ரும் காலாம் அறைகளிடைப் பாதை

Jaw - தாடை, அலகு, அனு
Jejunum - குனிகம்
Joint or articulation - பொருத்து, சந்தி

Kidney - பிருக்கம்
Kidney calyx - புரம்
,, cortical substance தசிரபாகம்
,, ducts of - தாரைகள்
,, hilum of - கவிகை
,, malpighian bodies of- மல்பீச்சிவகுகம்
,, mammillae - முளை
,, medullary substance - வெண்பாகம், தாகபாகம்
,, papillae of - முளை
,, pelvis of - மடை
Knee - முழந்தாள், முழங்கால், சானு

Labium - உதடு, இதழ்
,, cerebri - கோர்த்தவிதழ்
,, pudendi majora - பேரிதழ்
,, ,, minora - சிற்றிதழ்
Labyrinth - பிரமணம்
,, membranous - சவ்வுப் பிரமணம்
Lachrymal apparatus - கண்ணீருறுப்புகள், அசருபகாணம்
,, caruncula - உகி
,, papilla - அசுருக்கடு
,, puncta - அசுருநுழை
,, sac - கண்ணீர்ப்பை
Lacteal - பசாயனி, லக்தியல்
Lacuña magna பெருங் கேயம்
Lacus lachrymalis - அசுருக்குடா
Lamella - செதிள், வல்கம்
Lamina - படை, படலம்
,, cenerea - நரை
,, cribrosa of sclerotic - சல்லடை
,, elastic - இசி
Lamina membranacea- சவ்வு
,, spiralis of cochlea - சுரிவல்சம்
,, of vertebrae - வல்கம்

Laminated tubercle of cerebellum - வல்க குண்டம்
Laryngeal pouch - கிருகவுறை
Larynx - குரல்வளை, கிருகம்
,, cavity of - அறை
,, mucous membrane of - சளிச்சவ்வு
Lateral - பக்க, பாரிச
Lateral tract - பக்கதளம்
Leg - கால், சரணம்
Lens - இயவம், லென்சு
Levator - ஏற்றி, ஆரோபணி
Ligament of joint - விசி,
,, of viscera - பந்தம்
,, acromio - clavicular - கீசக செத்துரு
,, alar of knee - மடங்குச் சிறை
,, of ankle - குற்ப
,, anterior of knee - முன் விசி
,, arcuate - வக்கிர விசி
,, aryteno-epiglottic - மாடகசேமி
,, atlo-axoid - தலைதாங்கி யச்சு, தசனதாரி
,, of bladder false - பொய்
,, true - மெய்
,, calcaneo-astraguloid - சாரிக்குதி
,, calcaneo-cuboid - குதிக் கனவி
,, calcaneo-scaphoid - குதி நவ்வி
,, capsular - பை
,, carpo-metacarpal - கிலுத்தகரப
,, of carpus - கிலுத்த
,, central spinal cord - மையவிசி
,, ciliary of eye - சக்கரவம்
,, common vertebral - anterior - முன்பொது

Ligament posterior - பின் பொது
,, conoid - முக்கோண
,, coraco-acromial - கணைக் கீசக
,, coraco-clavicular - கணைச் செத்துரு
,, coraco-humeral - கணைப் புய
,, coracoid - கணை
,, coronary - வலய
,, costo-clavicular - பழுச் செத்துரு
,, costo-sternal - பழுவட்ச
,, costo-transverse - பழுக் குறுக்கு
,, costo-verterbral - பழு வம்சி
,, costo-ziphoid - பழு வேதி
,, cotyloid - கம்ச
,, crico-arytenoid - ஊர்மிகை மாடக
,, crico-thyroid - ஊர்மிகை வீதன
,, crucial of knee - குருச
,, cruciform - குருச
,, deltoid - முககோண
,, denticulate - சாணவ
,, ,, of elbow - முழங்கை
,, epiglottis - சேமியின்
,, gastro-phrenic - குக்ஷி விதான
,, Gimbernat's - கிம்பனர்
,, glanoid - சிரு
,, glosso-epiglottidian - நாச்சேமி
,, of hip - இடுப்பு
,, thyo-epiglottic - தனுச் சேமி
,, ilio femoral - பாவிகதொடை
,, ilio-lumbar - பாவிக கடி
,, of incus - சூர்மி

Ligament inter-articular of ribs-சந்திபிடை
,, inter-clavicular - செத்திரு விடை
,, inter-costal - பழுவிடை
,, inter - osseous - என்பிடை
,, inter-spinus- முள்ளிடை
,, inter-transeverse - குறுக்கிடை
,, inter-vertebral - வம்சியிடை
,, larynx - கிருக
,, lateral - பக்க
,, longitudinalofliver - நெடும்
,, lumbo-iliac - பாலிக கடி
,, lumbo-sacral - பீடிகைக் கடி
,, of malleous - முட்கரத்தின்
,, metacarpal - கரப
,, metacarpo-phalangeal -கரபாங்குலி
,, metatarsal - புரகுற்ப
,, metatarsophalangeal-புரகுற்பாங்குலி
,, mucus of knee - சித்தா மடங்கு
,, of neck - கழுத்து
,, oblique - சாய்,
,, obturator - குநதக
,, occipito-atloid - காடதாரி
,, occipito-axoid - அச்சுப்பிடர், தசனகாட
,, odontoid - தசன
,, orbicular - வலய
,, of ossiculae - செவியென்புகளின்
,, of ovary - சினைப்பை
,, palpebebral - இமை
,, of patella - சில்

Ligament of pelvis - கூபக
,, of the pinna - மடலின்
,, plantar long - தலநெடும்
,, Poupart's - பூபார்
,, pterygo-maxillary-பாதவதாடை
,, pubic - மேகன
,, radio-carpal - ஆரைக்கிலுத்த
,, radio-ulnar joint-ஆரைரத்தினி
,, recto-uterine - சராயுவிரேகி
,, rhomboid - சாசிவ
,, round of hip - கவை
,, of liver - ஈரலின் கொடி
,, of uterus - கருப்பைக் கொடி
,, sacro-coccygeal - பீடிகைப்புச்ச
,, sacro-iliac - பீடிகைப்பாலிக
,, sacro-sciatic greater - பிற்பீடிகாசன, பேர்பீடிகாசன
,, sacro-sciatic lesser - முற்பீடிகாசன், சிறுபீடிகாசன
,, sacro-verterbral - பீடிகைக் கசேரு
,, of scapula - வாகென்பின்சய
,, scapulo-clavicular - வாகு செத்திரு
,, of shoulder - தோள்
,, of spine with cranium - கபாலக சேரு
,, stapes - வேதிக
,, sterno-clavicular - வட்சசெத்திரு
,, of sternum - நெஞ்சென்பின்,
,, stylo-maxillary - வேதிணிதாடை

Ligament sub-flavour - வல்கவிடை
,, sub-pubic - கீழ் மேகனை
,, supra-spinous - முள்ளினி
,, suspensory - தூக்கு
,, tarsal offoot - குற்ப
,, tarso-metatarsal- குற்பபுறகுற்ப
,, tarsus - குற்ப
,, thyro-aretenoid - வீதனமாடக
,, thyro-epiglottid - வீதனசேமி
,, thyrc hyoid - வீதனதனு
,, tibio-fibular - கணைகர
,, tibio-tarsal - குற்ப
,, transverse - குறுக்கு
,, trapezoid - நாற்கோண
,, of uterus - கருப்பையின்
,, of vertebrae - வம்சி
,, vesico-uterine - சராயுக்கிலோம
,, of wrist - கைக் குளச
Limbus lutenus - கபீதி
Line - வரி, ரேகை,
,, (one twelfth of an inch) - லீன்
Linea alba - சிதரேகை
,, aspera - முரண்வரை
,, ilio-pectinea - மேகனபாலிரேகை
,, quadrai - சதுமூலிவரை
,, semilunaris - வக்கிரரேகை
,, splendens - களைக் கச்சு
,, spiral - சுரிவரை
,, transverse - குறுக்கு
Linguetta laminosa - சிகுவம்
Lip - உதடு, இதழ்
Liquor - நீர், நீரம்
,, Morgagni - மர்காஞ்சி
,, seminis - விந்து

Liver - ஈரல், காளகம்
Lobe - இதழ், அம்சம், லோபு
,, caudatus - வோய்
,, quadratus - சதுர்
,, spigeili - ஸ்பிகெல்
Lobule - சிற்றிதழ், அம்சகம், லபுல்
,, of ear - சோணை
Locur conruleus - நீலதளம்
,, niger - கார்தளம்
,, perforatus anterior - சல்லடைத் தளம்
Longus - நெடும், தீர்க்க
Lung - சுவாசப்பை, புப்புசம்
Lunula - நகப்பிறை
Lymph - வபா, லிம்வு
Lymphatic Ganglion - சோஷணக் கிரந்தி
,, auricular - செவி
,, axillary - அக்கிள்
,, bronchial - அசுக
,, buccal - கதுப்பு
,, gluteal - சகன
,, iliac - பாலிc
,, inguinal - வஞ்சண
,, intercostal - பழுவிடை
,, internal mammary - மாருள்
,, ischiatic - ஆசன
,, of large intestine - பெருங்குடல்
,, of lower extremity - அதக்காய
,, lumbar - இடுப்பு
,, mediastinal - மத்தியஸ்தான
,, mesenteric - மதியாந்திர
,, occipital - பிடர்
,, parotid - செவிமுற்கோண
,, of pelvis - கூபகதசிர
,, popliteal - மக்திர
,, radial - ஆரை
,, sacral - பீடிகை,

Lymphatic of small intestine-சிறுகுடல்
,, of spleen - பினிகை
,, of stomach - இரைப்பை
,, submaxillary - தாடைக்கீழ்
,, of thorax - நெஞ்சறை
,, tibial - ஙளக,
,, ulnar - இரத்தினி
,, of upper extremity - உற்காய
,, zygomatic - யுக.
Lymphatics - சோஷணிகள், வபாயனிகள்
,, abdomen - வயிற்று
,, arm - புய
,, broad ligaments - கருப்பைச் சிறை
,, cerebral - மூளை
,, chyliferous - பசாயனி
,, of clitoris - சமரி
,, coats of - கவசங்கள்
,, cranium - கபால
,, diaphragm - விதான
,, face - முக
,, fallopian tubes - கினைப்பாதை
,, gluteal region - சகன
,, head - தலை
,, heart - இதய
,, intercostal - பழுவிடை
,, inter-mammary - மாருள்
,, kidneys - பிருக்க
,, labia - இதழ்
,, larynx - கிருச
,, liver - ஈரல்
,, lower extermity- அதக்காய
,, lung - சுவாசப்பை
,, meningeal - மூளை யுறை
,, mesentery - மதியாந்திர
,, mouth - வாய்
,, nose - நாசி
,, nymphae - சிற்றிதழ்
Lymphatics aesophagus - இரைக்குழல்
,, ovaries - சினைப்பை
,, pancreas - கணைய
,, pelvis - கூபக
,, penis - சிசின
,, perinaeum - விடப
,, pharynx - தொண்டை
,, pia mater - கஞ்சுகி
,, prostate - புரஸ்த
,, rectum - கடைக் குடல்
,, scrotum - பீசப்பை
,, spleen - பினிகை
,, stomach - இரைப்பை
,, supra-renal - பிருக்கோபரி
,, system - வபாயனிமண்டலம்
,, testicle - பீச
,, of penis - சிசின
,, thorax - நெஞ்சறை
,, thymic - புரோா கோள
,, thyroid - வீதனகோள
,, upper extremity - உற்காய
,, of uterus - கருப்பை
,, of vagina - யோனி
,, valves of - கபாடங்கள்
Lyra of fornix - வல்லகி

Macula cribrosa-சல்லடைப் பொட்டு
Malleolus, same as ankle - பரடு
Malphigian body - மல்பீச்சி வசுகம்
Mamma - கொங்கை, முலை, ஸ்தன்னியம், ஸ்தனம், அம்மம்
,, nipple - முலைக் காம்பு
Mammal - சஸ்தனி, மமல்
Manubrium of sternum - பரிஞ்சு

படைகொண்டு செல்வர். அப்போது நாட்டைப் படையெடுத்துச் செல்லும் வேந்தன் வஞ்சி மாலே சூடி வீர முரசம் ஆர்ப்பத் தன் குடையையும் வாளேயும் நல்லதோர் முகூர்த்தத்தில் புறவீடு விட்டுக் கொற்றவைக்குப் பலிகள் கொடுப்பான். பெருஞ் சோற்று நிலை யொன்று இயற்றுவித்து அதனுல் தனது தீர்மானத்தை யாவரும் உணரச் செய்து யாவர்க்கும் ஊக்கம் விளேத்துப் படைக்கலம் வழங்குவான். படைக்கு வேண்டிய உணவு, படைக்கலம், கள், உடை, மருந்து முதலியவைகளேச் சேகரித்து முன்பாகவே வண்டிகளில் அனுப்பி வைப்பான். யாவும் தயாரானவுடன் படை பகைப்புலம் நோக்கிப் புறப்படும். அரசனுக்குத் துணையாக அவருடைய சிற்றரசர்கள் வருவார்கள். நாற் படைகளும் எங்கும் பரந்து செல்லும்போது முரசமும் சங்கும் ஒலிக்கும்; துகிற் கொடிகள் பறக்கும்; வேல்கள் வெய்யிலில் ஒளி வீசும். கரியும் பரியும் போரை நோக்கிக் களிப்பதுபோல் முழக்கஞ் செய்யும். பகைப்புல மடைந்தவுடன் புள்நிமித்தம் நோக்கித் தமக்கு வெற்றி நிச்சயமென்று வீரர்கள் ஆர்ப்பரிப்பர். அங்கு அரணைக் காத்துக்கொண்டிருக்கும் பகை வீரர்கள் அவர்களே உட்புக விடாமல் காக்கத் தீர்மானித்து அதற் கறிகுறியாகக் காஞ்சி மாலேயை மலேந்து கொள்ளுவர்.

இப்போது வஞ்சியார் வெற்றி பெறுவதாக வைத்துக் கொண்டு அவரது நிகழ்ச்சிகளேக் கருதுவோம். தம்மைத் தடுக்கவந்த வீரர்களேக் கொன்று அரண்களேப் பற்றியவுடன், வஞ்சியார் பகை நாட்டினுட்புகுந்து ஊர்களேத் தீயிட்டு எதிர்த்தோர்களே கொல்லுவர். இதுகண்ட பகை யரசன் தன் மானம் போனது கண்டு பொறுமல் தன் தூசிப் படையை ஏவித் தானும் எதிர்த்து வருவான். இரு படைகளுக்கும் உக்கிரமான போர் நிகழும். மறவர் பின் வாங்காமல் மலேவர். படைகள் ஒன்றோடொன்று தாக்குவதால் எழும் ஒலி எங்கும் நிறையும். நெடுநேரம் நடக்கும் இந்த யுத்தத்தில் வெற்றிபெறுவோர் யாவரெனத்தெரியாது. கடைசியாக வஞ்சியார் வெற்றிபெற்றவுடன் அவர்கள் ஊர்களே வளேத்

துக்கொண்டு பெண்களொழிய வேறு யாரும் வெளியேறா மல் தடுத்து அவற்றிலுள்ள அரும்பொருள்களைக்கொள்ளை கொண்டு அகங்களைப் பாழ்படுத்துவர். அக்காலத்து வழக்கப் படி ஊரின்கணுள்ள பொதியிலும், மன்றமும், கோட்ட மும், பள்ளியும், பார்ப்பார் அகங்களும் தவிர மற்றக்கட்ட டங்கள் யாவும் எரியுண்டு அழிவுறும் சிலரே படைகளை வீசி யெறிந்து உயிர்ப்பிச்சைபெறுவர். படையெடாதோர் அம் பலங்களில் தங்கித் தம்மைக் காத்துக்கொள்ளுவர். தங்கள் அகங்கள் எரியுண்டு கொள்ளைகொண்டதைப் பார்த்த மாதர் கள் பயத்தால் கண்ணைப்பொத்திக்கொண்டு வயிறலைத்து அலறி அம்பலங்களில் வந்தடைவர்.

இவ்விதமாக வஞ்சியார் வெற்றிபெற்றவுடன் வஞ்சிவேந் தன் தன் பாசறைசென்று, புண்பட்டோரைக்கண்டு பேசு வான்; சிலரை ஆலிங்கனஞ் செய்வான்; சிலரிறந்ததற்காக வருந்துவான் அவனது வீரர்கள் யாவரும் அவனைப்புகழ்ந்து போற்றுவர். அவன் தன்வீரர் ஒவ்வொருவருக்கும் தகுந்தபடி பரிசுகள் தந்து தண்ணளிசெய்வான். பரிசில்பெற்ற வீரர் கள் தம்மைப்பற்றிப் புகழ்ந்துகொள்வர். யாவரும் கல்லணை போல் சேனைவெள்ளத்தை நிறுத்திக்காத்த வோர் வீர னுடைய தனிநிலையைப் புகழ்வர். பாணர்கள் போர்வீரரின் திறமையைப் பரிந்துபாடிப் பெரும்பரிசில்களைப் பெறுவர். யாவரும் பாசறையில் உண்டுகளித்து ஆடிப்பாடித்திரிவர். இவ்வாறு வெற்றிபெற்றும் பகை யரசன் பணியாதது கண்ட வஞ்சி வேந்தன் கோபம் மிகுந்து, பண்டை வீடு நீங்காமலிருந்து அவனது செந்நெற்புலங்களையும் கருப்பந் தோட்டங்களையும் நீர்நிலைகளையும் அழித்துப் பாழாக்குவான். ஊர்களைப்பின் னும் கொளுத்தி எதிர்த்தோரைக்கொல்வான். மலைபோல் ஓங்கின மாளிகைகளெல்லாம் பாழடைந்து பேய்ச்சுரையும் பேய்ப்பீர்க்கும் மேற்கொண்டு நிற்கும். இவற்றைக்கண்ட வஞ்சிவேந்தன் ஆற்றூர்க்கிரங்கி மீள நினைப்பான். அதன் பிறகு பெருஞ்சோற்று நிலையொன்று இயற்றித் தனது வீரர் கள் யாவரையும் களிக்கச்செய்து அவ்வவர்களுக்குத் தகுந்த வாறு பரிசில்கள் ஈவான்.

சில வேளைகளில் வஞ்சிவேந்தனது பலத்தையுணர்ந்த பகையரசன் பணிந்து திறைகொடுத்துத் தனது ஊர்கள் பாழ்படாமல் காப்பாற்றிக்கொண்டு, தன் பகைவனை எதிர்க்கும் காலம் நோக்கி வாளாவிருப்பான்

சிலசமயத்தில் வஞ்சியாரினும் காஞ்சியார்வலியுடைத்தாராயின், வஞ்சியார் தொடக்கத்திலேயே முறியடிக்கப்பட்டு வந்த வழியே மீளுவர். இனி இத்தகையோரைப்பற்றிப் புகல்வோம்.

IV. காஞ்சி.

வஞ்சியாரது வரவைப்பார்த்தவுடனே அரண்களைக்காக்கும் வீரர் காஞ்சிப்பூவைச்சூடி தம்மெல்லையில் பகைவர் புகாதபடி காத்துத் தமது அரசனுக்கும் ஆளனுப்பித் தம்மாலியன்றவரை போர்செய்து தமது சேனைவெள்ளம்வரும்வரை பகைவரைத்தடுப்பார். இதன் மத்தியில் காஞ்சியாரின் அரசன் தனது வீரர்களை விரைவாக அழைத்து, அவர்களுக்குப் படை வழங்கி, நல்ல முகூர்த்தத்திலே வாளுங்குடையும் புறவீடு விடுத்து, வஞ்சினம் பேசிப்புறப்படுவான். காஞ்சிப்பூச்சூடிய அப்படைசெல்லும்போது அந்திப்போதில் உருகிய செக்கர்வானம்போல விருக்கும். முன்னமேயே குறித்தவோர் நாளிலே இருபடைகளும் கைகலக்கும். காஞ்சியார் பகைவருள் சிறந்த போர்வீரரின் தலைகளை வெட்டித் தம்மரசரின் முன்வைத்துப் பரிசில்கள்பெறுவர். போர்க்கள மெங்கும் பிணக்களமாகிப் பயங்கரமாகவிருக்கும். சில வீரர்கள் வீராவேசத்தால தமது விழுப்புண்களைத் திறந்துகொண்டு மாள்வர். இறநதுபட்ட வீரரின் மனைவியரில் சிலர் உடன்கட்டை ஏறுவர். சிலர் தம்கணவரிறந்த ஆயுதத்தின் மீது பாய்ந்து உயிர்துறப்பர். புண்பட்டுவீழ்ந்த தம் கணவரைச் சிலர் தழுவிக்கொண்டு ரணகளம் நீங்கித் தம் இல்லத்திற்கு அழைத்துச்செல்வர். இதன் பிறகு வெற்றிபெற்ற காஞ்சியார் கொற்றவைக்குக் களவேள்வி இயற்றிப், பாணர்க்குப்பரிசிலீந்து, வீரர்களுக்குத் தண்ணளிசெய்வர்.

சில சமயங்களில் காஞ்சியாரின் நிலை கேவலமாக விருந்தால் அவர்கள் வஞ்சியாரை எதிர்க்க நினையாமல் தமக்குப் புகலிட மொன்றைத் தெரிந்தெடுத்துக்கொண்டு அதில் அரண்க ளமைத்து அதற்குள் புகுந்து தம்மைக் காத்துக் கொள்வர். அப்போது பகைவர்கள் இக்கரை வளைத்துக் கொண்டு முற்றுகை போடுவர். அத்தருணம் எயில் காக்கும் வீரர் நொச்சி மாலையையும், எயிலை வளைக்கும் வீரர் உழிஞை மாலையையும் அணிந்து கொள்வர். இனி இவ்வரண் கோடலைப்பற்றிக் கவனிப்போம்.

V & VI. நொச்சியும் உழிஞையும்.

இவ்வாறு நொச்சியார் தமது மதிலகத்து இருந்ததும், இவ்வரணை எவ்விதத்திலும் பிடிக்க வேண்டுமென்ற வாசை தூண்டப் பகையரசன் நல்லதோர் நிமித்தத்திலே வாளுங் குடையும் பரஸ்தானப்படுத்தித் தன் சேனையுடன் உழிஞை சூடித் திண்ணிய மதிலையும் ஆழ்கிடங்கையும், இருண்ட காவற் காட்டையு முடைய அவ்வரணை முற்றுவான். இரு திறத்தாக்கும் போர் மூளும்போது உழிஞையாரை நெருங்க விடாமற் காக்கும் நொச்சியார் மெல்ல மெல்லத் தூரத்தப் பட்டுத் தம் காவற்காட்டை யிழந்து, கோட்டை மதிலுக்குள் சென்று தம்மைக் காத்துக் கொள்வர்.

உழிஞையார் கிடங்கை யணுகியவுடன் கோட்டைமதில் களின்மீது நொச்சியார் நின்று கொண்டு அம்பு மாரியை அவர்கள்மீது சொரிவர், மதிலை வளைப்போரில பலர் இறந்து போயினும் அவர்கள் ஊக்கிச் சென்று படகு கொண்டு கிடங்கைக் கடந்து, ஏணிகளைச் சாத்தி மதிலின்மீது ஏறத் தலைப்படுவர். அத்தருணமே உக்கிரமான போர் நடக்கும். உழிஞையார் தாம் சமைக்கும் துடுப்புக்களைக் கோட்டைக் குள் எறிந்துவிட்டு, இனித் தமக்கு இர வுணவு கோட்டைக் குள் ஆக்கப் படுமென்று வஞ்சினங் கூறி மதில்மீது ஏறுவர். தமது இரை கண்டு பாயும் பட்சிகளைப்போல, மதில் காப்போர் ஏணிகள் மீதேறும் வீரர்களின்மீது பாய்ந்து அவர்களை இருதுண்டாகச் வெட்டி வீழ்த்துவர். வீழ்ந்தோரது

இடம் உடனே மற்ற வீரர்களால் எடுத்துக் கொள்ளப்படும். இச்சண்டையில் இருபுறத்துமுள்ள வில்லாளிகள் தக்க உதவிகள் புரிவர். கிடுகும் பலகையும், பரிசையும் அவரது கூரிய அம்புகளைத் தடுக்க இயலாமையின் பலர் மாய்வர். வெட்டுண்ட வீரரின் குருதியால் கிடங்கும் சிவந்து காட்டும். உழிஞையார் மெல்ல மெல்ல ஊர்ந்து சென்று, மதிலின் குடுமியை யடைந்து, நொச்சியாருடன் கை கலந்து, அவரை ஒவ்வொருவராக வெட்டி வீழ்த்தும்போது, அவரது தலை கிடங்கிலும், உடல் கோட்டைக்குள்ளும் விழும். இவ்வாறு செய்யும் போரிலே நொச்சியார் ஒருங்கே சாகவும், உழிஞையார் மதிலைக் கைப்பற்றி, அந்நகரிலுள்ள பொருள்களைக் கொள்ளை கொள்வர். அங்கிருந்த யானைகளும் தோட்டிகளும் அரசனைச் சேரும். தமது சினத்தைக் காட்டும் பொருட்டு, அதற்குள்ளிருக்கும் சித்திர மாடங்களையும் அரண்களையும் இடித்துக் கழுதையே ஏரரகவும், வேலே கோலாகவும் உழுது வெள் வரகும் கொள்ளும் வித்தி வீர முரசார்ப்பக் களவேள்வியோன்று வேட்பான் உழிஞை வேந்தன்.

இதுகண்ட சிற்றரசர்கள் யாவரும் பணிவுடன் வந்து திறைகள் தந்து தம்மைக் காத்துக் கொள்வர். அவ்வாறு நிகழாமற் போயினும், பகை யரசன் மதிலைப் பற்ற முடியாமற் போயினும், இருதிறத்தார்க்கும் இதனினும் பெரும் போர் நிகழும். அப்போது இருவரும் தும்பை சூடிப் போருக் கெழுவர்.

VII. தும்பைத் திணை.

ஆ கோளிலேனும் அதற்குப் பின் நிகழ்ந்த போரிலேனும் தோற்றுப்போன அரசனுவது, தன்னரசன்தோற்றதை நினைந்த சிற்றரசனுவது தன் வலிமை உலகம் புகழ்தலே பொருளாகக் கருதிப் போர்க் கெழும்போது, தும்பை சூடி நாற்படைகளையும் நன்குற வமைத்துக்கொண்டு, தனது நண்பர்களும் சுற்றத்தார்களும் துணையாகப் புடைசூழச் சென்று பொருவான். பகை வேந்தனும் அவ்வாறே புகழ் வேண்டி

எதிர்ப்பான். இந்த யுத்தத்தில் ஒவ்வொரு வீரனும் தன்தன் திறமையைக் காட்டி அரிய போரை நிகழ்த்துவான். இரு வகைச் சேனையின் ஆற்றலும், யானை, குதிரை, தேர் இவை களின் நிலையும், இதில் நன்கு வெளிப்படும் சண்டையின் மும்முரத்தில் புறங் கொடுத்தாரைக் கொல்வது பாவ மென்று கருதாது அவரைக் கொன்று தூழிலாட்டிக் கலக்கு வர் வீரர். பல்லோரும் போர்க்களத்திலேயே மடிவர். சிலர் மடிந்தவேந்தர்க்கு மரியாதை செய்தற்காக அவனது உடலைச் சூழ்ந்து நின்று ஆடுவர். சிலர் தமது அரசனிறந்ததற்காகத் தமதுயிரை மாய்த்துக் கொள்வர். சில வீரமாதர் தத்தம் கணவன் விழுப் புண்பட்டிறந்ததற்கு மகிழ்ந்து கண்ணீர் சொரிவர் இத்தகைய போரில் இரு பெரு வேந்தரும் ஒருங் களத் தொழிவது முண்டு.

VIII. வாகைத் திணை.

மேற் கூறிய போரில் வெற்றிபெற்ற வேந்தன் வெற்றிக் கறிகுறியாக முடியில் வாகை வெண்பூ மாலையும் அரையில் சிவப்புக் கச்சும், காலில் பகை யரசனுடைய முடியாற் செய்த வீரக்கழலும் அணிந்து கொள்வான். பகை யரசன் மாளிகைகளி லுள்ள பண்டங்கள் யாவும் கொள்ளை யடிக்கப் படும். எடுத்துக்கொண்டு போகப்படாமல் எஞ்சி நின்ற பொ ருள்கள் யாவும் சிதறுண்டு கிடக்கும். மறக்கள வேள்வி வேட் டதைக் கண்ட பேய்கள் தேரின்முன் குரவை யாடும். பாணிச்சியர் வீரரோடு தேரின்பின் கூத்தாடுவர். பாணரும் பரிசிலரும் வாகை யரசனது புகழை ஏத்திக் கூறுவர். பிடி பட்ட நாட்டினரும் இவ்வரசனை மீக் கூறி வாழ்த்துதலு முண்டு.

IX. பாடாண் திணை.

இவ்வாறு வெற்றிப் புகழுடன் திரும்பிய அரசனை யாவ ரும் எதிர்கொண் டழைப்பர். அவனது புலவர்கள் அவ னுடைய ஆண்மையையும் கொடையையும் தண்ணளியையும் வாயாரப் பாடுவர். பரிசிலர் தமக்கு வேண்டியதைக் கேட்டுப் பெறுவர். சிலர் அவனது குடையையும், வாளையும் முரசை

யும் ஏத்திக் கூறுவர். பரிசில் பெற்றோர் பிறரையும் இவ்வரசன் பாற்சென்று பரிசில் பெறுமாறு ஆற்றுப் படுத்துவர். சிலர் கொடுத்தாரை ஏத்திக் கொடாதோரைப் பழிப்பர். சிலர் பாசறையில் மனக் கவற்சியின்றித் துயின்ற தம்மரசர்க்குத் துயிலெடை பாடுவர். சிலர் அரசரது சிறை விடுதல் செருவொழிதல் முதலிய நற்காரியங்களைப் புகழ்ந்து வெள்ளணி பாடுவர் சிலர் அரசனுக்கு ஆண்டுதோறும் நடத்தும் நீராட்டு மங்கலத்தைப் பாடுவர். இவ்வாறாக இவர்கள் பாடும் துறைகளுக்கு அளவே கிடையாது. இதுவன்றி தேவர்க்குரிய பாடாண் திணையுமுண்டு. இதில் முனிவர், பார்ப்பார், ஆநிரை மழை வேந்தர், உலகு என்ற அறுவரையும்வாழ்த்துதல் அடங்கும்.

X. பொதுவியல்.

இப்பகுதியில் மேற்கூறிய ஒன்பது திணைகளுக்கும் பொதுவாயுள்ளனவும் அவற்றிற் கூறு தொழிந்தனவுமாகிய துறைகள் அடங்கும் அதாவது போந்தை, வேம்பு, ஆர் இவற்றைப் புகழ்வது, கழனிலை கூறுவது, பட்ட வீரர்க்குக் கல்நட்டுப் பழிச்சல், கொழுநனை யிழந்த மடந்தையது நிலை, தலைவியையிழந்த தலைவன்நிலை, மகனிறந்த வாஞ்சையால் மரித்த தாயின்நிலை, அரசனிறநதபின் குடிகள் படும் துயரம், தலைவி உடன்கட்டை ஏறுதல் முதலிய பலவும் இவ்வதிகாரத்தில்வரும்

இவையன்றிப் பெரும்பான்மை வீட்டின்பம் காரணமாக அறம்பொருளின்ப மென்பவற்றாலும் அவற்றின் பகுதியாகிய உயிர், யாக்கை, செல்வம், இளமை முதலியவற்றாலும் நிலை பேரில்லாத உலகியற்கையைக் கூறுவதும் காஞ்சியெனப்படும். இப்பகுதியில் புலவர்களால் புகலப்படும் நீதி மொழிகளும், சன்மார்க்க விதிகளும் ஆழ்ந்த கருத்துக்களும் அடங்கும் புறநானூற்றுள் காணப்படும இத்தகைய செய்யுட்கள் பல

அவற்றுள் ஒரு சிலவற்றை, ஈண்டெடுத் துரைப்பது அவசியமாகின்றது.

தென்னிந்தியாவில் அதிலும் தமிழ் நாட்டில் ஜீவ நதிகள் மிகச் சிலவே. மாரிக்காலத்தில் அவை பெருக்கெடுத்தும், மற்றக் காலங்களில் வறண்டும் போகும். அதனால் வேளாண்மைக்கு நீர் நிலைகள் அமைப்பது தமிழ் நாட்டார்க்கு அவசியமாகின்றது. அன்றேல், அரசனது நாடு வளங்குன்றி அவனது பொருள் வருவாய்க்கும் கேடுவிளையும். இத்தன்மை புணராத அரசர்க்கு இடித்துரைப்பது தமது கடனெனவ அக்காலத்துப் புலவர் கருதினர். பின் வரும் புறநானூற்றுப் பாடல் இதை நன்கு விளக்குகின்றது.

நீரின் றமையா யாக்கைக் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே;
உண்டி முதற்றே உணவின் பிண்டம்;
உணவெனப் படுவது நிலத்தொடு நீரே;
நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு
உடம்பு முயிரும் படைத்திசி னோரே;
வித்திவா னோக்கும் புன்புலம் கண்ணகன்
வைப்பிற் றாயினும் நண்ணி யாளும்
இறைவன் றாட்குத வாதே; அதனால்
அடுபோர்ச் செழிய! இகழாது வல்லே
நிலனெளி மருங்கின் நீர்நிலை பெருகத்
தட்டோர் அம்ம இவண்தட் டோரே;
தள்ளா தோர் இவண் தள்ளா தோரே.

புற. 18.

தன்னைத் தேடிவந்தோரது வறுமையை நீக்குவது அரசர் கடனாயினும், அவர் அதை மறப்பதுமுண்டு. அச்சமயங்களில் அவர்க்குத் தைரியமாய் எடுத்துக்காட்டி வற்புறுத்துவோர் புலவரே யொழிய வேறு இலர். அவர்கள்

“தேய்த லுண்மையும் பெருக லுண்மையும்
மாய்த லுண்மையும் பிறத்த லுண்மையும்
அறியா தோரையும் அறியக் காட்டித்
திங்கட் புத்தேள் திரிதரும் உலகத்து
வல்லா ராயினும் வல்லுந ராயினும்